# இயற்கைக்கான தருணமும் இயைபாக்கம் அடையவேண்டிய சூழலும்




**யாழ் மாவட்டத்தில் நிலையான சூழல் பாதுகாப்பு குறித்தும் இயற்கையுடன் ஒன்றினைந்த சமூகத்தினை கட்டியெழுப்புவது குறித்தும் செயல்படவேண்டிய தருணத்தில் நாம்.....................................**

**அறிமுகம்**

உலக சுற்றாடல் தினம் சுற்றுச் சூழலியரீதியில் மிகவும் முக்கியமான நாளாகும். அரசாங்கங்கள், குடிமக்கள், வியாபார பிரிவினா் உள்ளிட்ட அனைவரும் சுற்றுச் சூழல் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனும் நோக்கில் 1974 லிருந்து கொண்டாடபட்டு வரும் நாளாக சூழல் தினம் காணப்படுகின்றது.

உலக சுற்றாடல் தினம் ஜீன் 5, 2020 ற்கான பிரதான கருப் பொருளாக (Theme) இயற்கைக்கான தருணம் (Time for nature) அதாவது உயிர் பல்வகைமை குறித்தும் அதன் பாதுகாப்பபு குறித்தும் அதீத கவனம் கொள்ள வேண்டிய காலமாக இது அமைகின்றது. 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சீனாவிலிருந்து ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று உலகமெங்கும் பரவலடைந்து 390,000 மேற்பட்ட உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதுடன் 60 லட்சத்திற்கு மேற்பட்ட . மக்கள் இத்தொற்றினால் பாதிக்கபட்டுள்ளனர். இன்னமும் கட்டுபடுத்த முடியாத சவால் மிக்கதாக உலகின் அனைத்து கட்டுமானங்களின் செயற்திறனை இடைநிறுத்திய உயிர்கொல்லி வைரஸாக கொரோனா விளங்குகின்றது. இக் கொரோனா தொற்று பரவல் காரணமாக உலகில் 19 நாடுகளில் பொது முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப் பொது முடக்கமும், ஊரடங்கு நடைமுறையும் மக்களை வீட்டிலிருக்க வகை செய்தன. தொழிற்சாலைகள்

வாகன போக்குவரத்துகள் உள்ளிட்ட அனைத்தும் நிறுத்தபட்டன. இதனால் வளிமண்டலத்திற்குச் செல்லும் மாசுக்கள் என்றுமில்லாதவாறு குறைவடைந்தன. எல்லா மக்களும் தொடர்ச்சியாக வீட்டிலிருந்ததனால் இயற்கையை பற்றி சிந்திக்க முனைந்தார்கள். சுத்தமான காற்று, குடிநீர் , ஆரோக்கிய உணவு என்பனவற்றை நுகர்ந்தார்கள். இந்நிலையில் வீட்டுச் சூழல் தொகுதி மனஅமைதியையும், ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் தந்தது. வரையறுக்கப்பட்ட உணவுக் கிடைப்பனவு உள் மற்றும் வெளிசெல்லலுக்கான கட்டுப்பாடுகள் இருந்த வேளையில் மன அழுத்ததிலிருந்து விடுவித்து உமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்து கொரேனா தொற்றுப் பரவலிலிருந்து மட்டுமன்றி ஏனைய தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களிலிருந்தும் எம்மை பாதுகாத்தது பாதுகாத்துக் கொண்டிருப்பது எம்மைச் சூழ்ந்து காணப்படும் இயற்கையே என்ற வகையில் இயற்கை குறித்த எமது கவனத்தை முக்கியபடுத்தவும் இயற்கையுடன் ஒன்றிணைந்த வாழ்வே நிலையான வாழ்வு எனும் சித்தாந்தத்தை வலியுறுத்தி இவ்வாண்டின் சூழல் தின கருப்பொருளின் தத்துவத்திற்கு அமைவாக யாழ் மாவட்டத்தில் எமது வீட்டுச் சூழல் தொகுதியை மீள கட்டியெழுப்புதல்,மற்றும் அதனை தொடர்ச்சியாக நிலைக்கச் செய்தல் போன்றனவற்றையும் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களை விழிப்புணர்வு மற்றும் சூழலுக்கு இயைந்த அல்லது நட்புறவான அபிவிருத்தி செயன்முறையினுடாக பாதுகாப்பதையும், இயற்கைக்கு இயைவான, இயற்கையுடன் ஒன்றிணைந்த சமூகத்தை கட்டியெழுப்புதல் ஆகிய நோக்கங்களையும் வலியுறுத்தி இவற்றை இதயசுத்தியுடன் எல்லா தரப்பினரது பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கான தருணம் இது என்ற வகையில் எல்லோருடைய கவனத்தையும் வலியுறுத்தும் வகையில் **யாழ் மாவட்டச் செயலகத்தால் இக்கட்டுரை பிரசுரமாக்கபடுகிறது.**

உயிர் பல்வகைமை என்பது பூமியில் உள்ள எல்லா உயிர் வாழ் அங்கிகளினதும் அவற்றின் வாழ்க்கை முறைகளையும் உள்ளடக்கியது ஆகும். நாம் உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், எங்கள் பூமியில் சாத்தியமான வாழ்க்கைக்கு பங்களிக்கும் காலநிலை என எல்லாம் இயற்கையிலிருந்து வந்தவையாகும். எனவே உயிர் பல்வகைமையென்பது மனிதனின் ஆரோக்கிய வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிற்கும் பங்களிக்கும் அடிப்படையான ஒன்றாக அமைகிறது. எமது இலங்கை நாடு செழிப்புமிக்க உயிர் பல்வகைமையை கொண்டது. எமது வட பகுதி அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் உயிர் பல்வகைமை அடிப்படையில் செழிப்பான நிலையில் காணப்படுகின்றது.

இங்கு காணப்படும் கடனீரேரிகள் கண்டல் தாவரங்கள் என்பன பெறுமதிமிக்க உள்நாட்டு மற்றும் குடிபெயர் பறவைகளின் பிரதான வாழ்விடமாக அமைகின்றன. அது மட்டுமன்றி பெருமளவான கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விடமாகவும் இவை அமைகின்றன. இவற்றை விட மாவட்டத்தை சூழ்ந்து காணப்படும் கடற்பகுதி, வடமராட்சி கிழக்கு பகுதியிலுள்ள அழகிய மணல் மேடுகள், ஏனைய இயற்கை தாவரங்கள் மற்றும் குளங்கள் போன்றன எமது இயற்கை சூழல் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான வளங்களாக காணப்படுகின்றன.

**துரித கிராம - நகரமயமாக்கமும் வீட்டுச் சூழல் தொகுதி இழப்பும்**

**வீட்டுச் சூழல் தொகுதியின் முக்கியத்துவம்**





இவ்வாறு விளங்கும் சூழல் தொகுதிகளில் வீட்டு சூழல் தொகுதி என்பது பிரதானதொன்றாக விளங்குகின்றது. இயற்கையாகவும் மக்களாலும் உருவாக்கப்பட்ட இச் சூழல்தொகுதி ஆரோக்கியமான காற்று, சுவாசம், குடிநீர், உணவு, மருந்து, பொருளாதாரம் மற்றும் ஏனைய வீட்டு தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு சூழல் தொகுதியாக விளங்குவதுடன் எமக்கு மன அமைதியையும் ஆரோக்கியத்தையும் தந்த, தருகின்ற ஒரு சிறந்த சூழல் தொகுதியாக வீட்டு சூழல் தொகுதி விளங்கியது. மூன்று தசாப்த கால யுத்தமும் அதன் விளைவான இடம்பெயா்வு மற்றும் புலம்பெயா்வு போன்றனவும் மக்களின் நவீன வாழ்க்கை முறைப் போக்குகள் போன்றனவும் இச் சூழல் தொகுதியின் செயற்திறனை முற்றாக அழிவடையச் செய்துள்ளது.இதன் விளைவாக பல பெறுமதிக்க வதிவிடப் பறவைகள் மற்றும் ஏனைய உயிரினங்களை செழிப்பான வாழ்வை அழித்ததுடன் இச் சூழல்தொகுதி எமக்கு அளித்த ஆரோக்கிய வாழ்க்கையையும், மன அமைதியையும் தொலைத்து நிரந்தர நோயாளா்களாக நாம் மாறிவருவதுடன் எமது அடுத்த இளைய தலைமுறையினருக்கு அா்த்தமற்ற வாழ்கையை புகட்டும் அடிப்படைகளையும் வழங்கி வருகின்றோம். அதாவது 1995 ஆம் ஆண்டுக்கு முன்னா் எமது வீட்டுச் சூழல் தொகுதி சிறப்பான நிலையிலேயே இருந்தது. அதாவது வீட்டைச் சுற்றி அழகிய வேலிகள் மாமரம், கொய்யா, தேசி, தோடை, வேம்பு என பழ மரங்களும், நிழல் மரங்களும் காணப்பட்டன. இவை எமக்கு ஆரோக்கியமான உணவு மருந்து என்பவற்றைத் தந்து எமது உடலில் நோய் எதிா்ப்பு சக்தியை வளா்க்க உதவின. அத்துடன் மன அமைதியை எமக்கு அளித்ததுடன் காலநிலை மாறுபாடுகளின்போது எம்மைப் பாதுகாத்தன.

**வீட்டுச் சூழல் தொகுதி இழப்பு**

யாழ்ப்பாண மாவட்டம் 1995 ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வை சந்திப்பதற்கு முன்னா் இயற்கையுடன் இயைந்த வாழ்கையையே மக்கள் பின்பற்றினா். ஆயினும் 1996 ஆம் ஆண்டில் மீண்டும் மீளக்குடியமா்ந்த பின்னா் 2002 சமாதான சூழல் ஏற்படுத்தப்பட்டது வரை இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை தொடா்ந்து எம்மாவட்ட மக்கள் பின்பற்றி வந்தனா். 2002 ஆம் ஆணடிற்கு பின்னரான சூழலே யாழ்ப்பாண மக்களின் சமூக வாழ்வில் மாற்றங்கள் உருவாகத் தெடங்கிய காலமாகும்.அதாவது புலம்பெயா்ந்த எமது மக்கள் பல வருடங்களின் பின்னா் தாயகம் நோக்கி வருகை தந்ததுடன் பல புதிய வீடுகள் கட்டப்பட்டன. ஏல்லா பகுதிகளிற்கும் மின்சார வசதி கிடைக்கத்தொடங்கியமையால் தொலைக்காட்சி பாவனை முதன் முதலாக எல்லா வீடுகளிலும் அதிகரிக்கத் தொடங்கியது இதன் விளைவாக தமிழ்நாடு சின்னத்திரை சீரியல் நாடகங்கள் எமது மாவட்ட மக்களின் பிரதான பொழுதுபோக்கு விடயமாக மாறியது. இதனால் வீட்டுச் சூழல் பராமரிப்பில் சற்று இடைவெளி ஏற்படத் தொடங்கியது.இந் நிலை தொடா்ந்து 2009 இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னா் பல்துறைக் கட்டுமானங்கள் அதிகரிக்கத் தொடங்கின. 1995 இற்கு முன்னரும் 1996-2009 வரை கிராமங்கள் தோறும் பல்வேறு தனியாா் காணிகள் பொதுக்காணிகள் காணப்பட்டன. இவ்வாறான காணிகளில் பல்வேறு பயன்தரு மரங்களும் மூலிகை மரங்களும் காணப்பட்டன. குறிப்பாக மாமரம், ஆல், அரசு போன்ற பெரிய மரங்களும் மற்றும் ஆமணக்கு, பன்னை, அன்னமுன்னா, அனிஞ்சில், மஞ்சுவண்ண போன்ற மூலிகை தாவரங்கள் என்பன இயற்கைச் சூழலை பிரதிநிதித்துவம் செய்தன. இவை இயற்கைச் சூழலை பிரதிநிதித்துவம் செய்தது மட்டுமன்றி சிறுவா்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான கிட்டிப் புல்லு, பேணியும் பந்தும், உத்தி, ஒளிச்சுப் பிடித்து விளையாடுதல், மாபிள் அடித்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்ற போது இயற்கையுடன் ஒன்றித்த வகையில் விளையாட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டாா்கள்.தற்போது இத்தகைய இடங்கள் கட்டடங்கள் நிறைந்த பகுதியாக மாற்றமடைந்துள்ளன. இதன் மூலம் தொலைந்தவை இயற்கை சூழல்தொகுதி மட்டுமன்றி சிறுவா்களின் இயற்கையுடன் ஒன்றித்த வாழ்க்கையும் தான்.

இதேபோன்று அரச சேவையில் பல்வேறு நியமனங்கள் வழங்கப்பட்டன. புதிய நியமனத்தின்போதும் இடம்மாற்றத்தின் போதும் தாங்கள் வாழும் எம் மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லத்தொடங்கினா். மேலும் வீட்டில் அநேகமாக கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்லுகின்ற பண்புகள் இவ்வாறான நடவடிக்கைகளாலும் பிள்ளைகள் புலம்பெயா்ந்நததாலும் பல பெற்றோா்கள் பிள்ளளைகளின் பராமரிப்பற்று வாழும் சூழல் ஏற்படத்தொடங்கியது. இதனால் வீட்டு பராமரிப்பு என்பது சவாலான விடயமாக மாறியபோது வீட்டில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. அதாவது அழகிய வேலிகள் மதில்களாக மாற்றம் பெற்றன. இதனால் செம்பகத்தின் உணவு கிடைப்பனவு சவாலான விடயமாக மாறியது. மரங்கள் வேலிகளில் உள்ள எறும்புகள், பூச்சிகள், மசுக்கொட்டிகளை உணவாகக்கொள்ளும் செம்பகம் அழவடைந்து செல்லும் இனமாக மாறியுள்ளது. கட்டுமானங்களுக்காக பல்வேறு பயன்தரு

மரங்கள் அழிக்கப்பட்டன அதாவது பழ மரங்களான கொய்யா, மா, மாதுளை போன்றன அழிக்கப்பட்ட போது இவை நோக்கி வரும் வதிவிடப்பறவைகளான துக்கணாங் குருவி, சிட்டுக்குருவி, மைனா புளுனி, குயில், சோலைப்பாடி, கிளி, எண்ணிக்கையும் குறைவடையத் தொடங்குகின்றென. இவ் பறவைகளுக்கான உணவு ஆரம்பத்தில் வீட்டுச் சூழல்தொகுதியிலேயே கிடத்தது ஆனால் இன்று இவற்றுக்கான உணவைத் தரும் பழ மரங்களை நாம் அழித்துவிட்டோம். காகம் போன்ற பறவைகளும் ஏனைய பறவைகளும் உணவுக்காகவும் நீருக்காகவும் அலைகின்றன. நாங்கள் தற்போது துயில்விட்டு எழுகின்றபோது பறவைகளின் ஒலி கேட்பதில்லை. வீட்டிலிருந்து நீர் இலகுவாக எடுப்பதற்கு நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டன. ஆதனால் பல கிணறுகள் ஓய்வூதியம் பெற்றன. இவற்றை விட பல்வேறு வீடுகளின் முற்றத்தின் தரைக்கு கொங்கிறீட் போடப்பட்டன. இதனால் நிலத்தடி நீர் செல்வதற்கான தன்மை இல்லாமல் போகின்றது. கிராமங்களில் பல்வேறு பகுதிகளும் கட்டுமான அபிவிருத்தி நோக்கி நகர்ந்து செல்கின்றன.இதனால் இயற்கையின் இயல்பான இயற்கத்திற்கு நாம் பிரதான தடையை ஏற்படுத்தியுள்ளோம்.

விவசாய நிலங்களில் அதிக விளைச்சலுக்காகக கிருமி நாசினி மற்றும் இரசாயனப் பசளைகள் கட்டுப்பாடற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன. .இதனால் மருந்து பாவனை கொண்ட மரக்கறிகளையே தினமும் நாம் உட்கொள்கின்றோம்.இரசாயனப்பசளை பயன்பாட்டால் நிலத்தடி நீர் மாசுபடுவதுடன் நிலமும் தரமிளக்கப்பட்டு வருகின்றன.. இதனால் இன்று புற்றுநோய், நீரிழிவு, சிறுநீரக நோய், நுரையீரல் மற்றும் இதய நோய் என் பல்வேறு நோய்கள் அதிகரித்துள்ளன. ஆரம்பத்தில் யாழ் மாவட்டத்தின் நகரப்பகுதியில் தனியார் வைத்திய நிலையம் ஒன்று மட்டும் இருந்தது.ஆனால் இன்று கிராமங்கள் தோறும் பல இருப்பதுடன் இணையவழியிலான பதிவுகள், சலுகைகள் வழங்கல் என்பன விற்பனை நோக்கில் செல்கின்றன. புலம்பெயர் உறவுகளின் வருகையும், உலகமயமாக்கற் போக்குகளிற்கு எமது மாவட்டமும் ஆட்கொள்ளப்பட்டமையாலும் இன்று எமது சமூகம் நவீன வாழ்வியலின் வலைக்குள் புதைந்து விட்டது. புதிய தொடுகை கைத்தொலைபேசிகள் சமூக வலைத்தளங்களின் பயன்பாடுகளில் அதிகமாக மூழ்கியமையால் சமூக பொறுப்பும் வாழ்க்கைப்பொறுப்பும் உடைந்து வீட்டுச் இயற்கை சூழலின் மீதான கவனமும் முற்றாகவே குறைவடைந்துள்ளது. அது மட்டுமன்றி மக்கள் ஆரோக்கியமாக இருப்பதில்லை. ஒருவருடன் ஒருவன் மனம் விட்டு கதைப்பதில்லை. பாரிய சமூக இடைவெளி அதிகரித்து வருகின்றது.

ஆரம்பத்தில் எமது பெற்றோர்கள் நாம் சிறிய குழந்தைகளாக இருக்கும்போது எமக்கு உணவு ஊட்டும் போது இயற்கையான விடயங்களை காண்பித்து உணவு ஊட்டுவார்கள்.அதாவது நிலவு, சூரியன், பறவைகள் போன்ற பல்வேறு விடயங்களை காண்பித்து உணவு ஊட்டினார்கள். இதனால் சிறு வயதிலேயே இயற்கை பற்றிய எண்ணம் ஊட்டப்பட்டு வந்தன. ஆனால் தற்போது முகநூலில் வரும் படங்கள் சினிமா போன்றவற்றை காட்டியே உணவு ஊட்டுகின்றார்கள்.

வீட்டுச் சூழல் தொகுதியில் பழமரங்களுக்கு மேலாக பல்வேறு மூலிகை தாவரங்களும் எமது மாவட்ட மக்களால் வளர்க்கப்பட்டு வந்தன. துளசி, கற்பூரவள்ளி, குறிஞ்சா, சண்டி, தூதுவளை, தேசி என்பன மூலிகை தாவரங்களாக வளர்க்கப்பட்டு வந்தன .இவற்றின் மூலம் எமது மக்கள் வீடுகளில் இயற்கை முறை மூலம் மருத்துவம் செய்து ஆரோக்கியமாக வாழ்ந்தனார்கள். வீட்டுச் சுற்றாடலே எமக்கு பொழுது போக்கினையும் மனஆரோக்கியத்தையும் தந்ததுடன் பல்வேறு உயிரினங்களின் வாழ்க்கையையும் நிலை பெறச்செய்தன. ஆனால் இவ்வாறான பலவற்றை நாம் இழந்துள்ளோம்..

**கொரோனாவும் வீட்டின் இயற்கை சூழல் தொகுதியும்**

2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சீனாவில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று இன்று உலகமெங்கும் பரவலடைந்து. தற்போது இதன் தாக்கம் பல்வேறு நாடுகளில் அதிகரித்து வருகிறது. 19 நாடுகளில் பொது முடக்கம் (Lockdown) நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கையில் 1700 இற்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளன். 11 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக இலங்கையிலும் பொது முடக்கமும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டன. இதனுடாக மக்கள் வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். இலங்கையில் இவற்றின் பாதிப்பு குறைவாக காணப்பட்டாலும் பொது முடக்கமும் ஊரடங்கு நடைமுறையும் எல்லா மக்களையும் வீடுகளில் முடங்கவைத்தன. சுமார் நான்கு மாதங்களிற்கு மேலாக இது தொடர்கின்றது. நான்கு மாதங்களிற்கு மேலாக இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் தொடர்ச்சியாக பலநாட்கள் வீட்டில் கழிக்கவேண்டியிருந்ததனால் ஒவ்வொருவரும் வீட்டுச்சூழல் தொகுதி பற்றி சிந்திக்கத் தொடங்கினர்.கொரோனா அபாயம் தொடர்ந்து காணப்படுவதனால் கிராம சுய நிரந்தர தனிமையாக்கமும் வீட்டு வாழ்க்கையுமே நிரந்தரமானது எனும் சிந்தனை எல்லோர் மனதிலும் எழுச்சிபெற்றன. பொதுமுடக்க வேளையில் வீட்டிலிருந்த மக்கள் தங்கள் வீட்டுச்சூழல் தொகுதியை விருத்திசெய்யும் நடவடிக்கையில் ஈடுபடத்தொடங்கினர். ஏனெனில் இக்காலத்தில் ஆரோக்கியமான காற்றை வீட்டிலிருந்து சுவாசித்தார்கள், கிணற்றிலிருந்து பெற்ற குடிநீரையே பருகினார்கள். ஒருவரும் போத்தல் குடிநீரை பயன்படுத்தவில்லை. எல்லோரும் வீட்டுத்தோட்ட

செய்கையில் ஈடுபட்டார்கள், ஈடுபடுகிறார்கள், மரம் நடுகையில் ஈடுபடுகிறார்கள், பொதுமுடக்க வேளையில் ஆரோக்கியமான உணவை மூன்று வேளையும் சமைத்து உண்டார்கள். இக்காலத்தில் ஒருவருக்கும் பாரிய நோய்கள் ஏற்படவில்லை, வைத்தியசாலைக்கு சென்ற நோயாளர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக காணப்பட்டது, இறப்புக்கள் குறைவடைந்தன, விபத்துக்களும், ஏனைய சிறு சிறு பாதிப்புக்களும் முற்றாக குறைவடைந்தன. ஏவ்வாறு இது சாத்தியமானது என்பது ஆச்சரியத்திற்குரியது. பயிர்களுக்கு பசளையோ கிருமிநாசினியோ பயன்படுத்தப்படவில்லை.மக்கள் ஆரோக்கியமான மரக்கறிகளை உண்டார்கள். வீட்டில் கிடைக்கும் மூலிகைகளை மருந்தாக பாவிக்கத் தொடங்கினர். இரசம், மல்லி தேநீர், வேப்பம் பட்டை, குறிஞ்சா, பாற்கஞ்சி, தூதுவளை, மஞ்சள் என பாரம்பரிய மருத்துவ உணவுகளை நுகர்ந்தார்கள். புதிது புதிதாக உருவாகிய பல நோய்கள் முற்றாக குறைவடைந்துள்ளன. எல்லோரும் முன்னருடன் ஒப்பிடுமிடத்து ஒரு வகையான மன அமைதியை அடைந்தனர். உண்மையாக கொரோனா தொற்று காரணமாக உருவாகிய பாதுகாப்பு முறை எங்களுக்கு கற்றுத்தந்த பாடம் என்ன? கொரோனா தொற்றிலிருந்து எங்களை பாதுகாக்க உதவியது மட்டுமன்றி மனிதன் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலைகளையும் வலையமைப்பில் இருப்பதற்கும் அப்பால் இயற்கையுடன் ஒன்றிணைத்திருப்பது பல்வேறு நோய்களிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கான நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் அதிகரித்து எமது நிலையான வாழ்விற்கான மன அமைதியையும் ஆரோக்கியத்தையும் தரும் என்ற வகையில் வீட்டுச்சூழல் தொகுதியை விருத்தி செய்தலும் அதனை நிலையாக பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம் எனவே எமக்கு கற்றுத்தந்த பாடம் வீடுகளில் அழிந்தும் அழியாமலும் எஞ்சியிருக்கும் சூழல்தொகுதியே எமக்கு ஆறுதலைத் தந்தது என்றால் இதனை நிலையான மேலும் விருத்தி செய்தால் எவ்வாறான பலன்களை பெற்றுக்கொள்ள முடியும் என்ற செய்தியையும் நாம் இயற்கை அன்னைக்கு எப்போதும் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்பதையும் இயற்கையுடனான ஒன்றித்த வாழ்வே எல்லாவற்றிலிருந்தும் எங்களை பாதுகாக்க உதவும் என்பதையும் கற்றுத் தந்திருக்கின்றன.

**சூழல் பாதுகாப்பும் இயற்கையுடன் ஒன்றிணைந்த சமூகத்தை கட்டியெழுப்புதலும்**

கொரோனாத் தொற்றுக்கு முன்னர் உலகின் பல்வேறு சூழல்த் தொகுதிகள் மனிதனின் பல்வேறு நடவடிக்கைகளால் பாரிய அழிவையும் அச்சுறுத்தலையும் எதிர்கொண்டன.காடழிவுகள் வன விலங்குகளை வேட்டையாடுதல், விலங்கினங்களின் உறுப்புக்களை விற்றல், வனவிலங்குப் பகுதிகளை ஆக்கிரமித்தல்,நகரமயமாக்கற் செயற்பாடுகள் என்பன அதிகரித்தன.திண்ம திரவக் கழிவுகளின் உற்பத்தி, கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெறியேறும் புகைகள், வாகனப்பயன்பாடு அதிகரித்தமையால் வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்கள் அதிகரித்தன.. நாடுகளினதும் பல்வேறு அரசாங்கங்களினதும் நிறுவனங்களினதும் மக்களினதும் செயற்பாடுகள் எல்லைமீறிச் சென்றன. இதன் விளைவாக இயற்கையிக் கோரத்தாண்டவத்திற்கு உலகின் பல்வேறு இடங்கள் ஆட்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு அனர்த வேளையிலும் இயற்கை எமக்குச் சொல்லும் பாடம் நாம் இயற்கையை இயங்கவிடவேண்டும் என்பதுதான் இதை உணராமல் விட்டமை அண்மைய பாரிய அழிவகளான அமேசன் காட்டுத் தீ, அவுஸ்ரேலியா காட்டுத்தீ மற்றும் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து இந்தியா, இலங்கை என பரவலடையும் வெட்டுக்கிளிகளின் தாக்கம் (Locust infestation) போன்றவற்றைக் குறிப்பிடலாம். அபிவிருத்தி அடைந்த நாடாகிய அவுஸ்ரேலியாவால் காட்டுத் தீயை கட்டுப்படுத்துவதற்கு ஒரு மாத காலம் சென்றது. பல உயிரினங்கள் அழிந்துவிட்டன. மனித நடவடிக்கையின் விளைவாக ஏற்பட்ட காலநிலை மாற்றமே இதற்கு காரணமாகும்.

எனவே இயற்கை வளங்கள் உயிர்ப்பல்வகைமையின் தாயகமாக எமது சாத்தியமான காலநிலை மாற்றத்திற்கும் சூழல் சமநிலையை பேணவும், உணவு, மருந்து என்பவற்றுடன் பொழுதுபோக்கையும் எமக்கு தந்து நிலையான மானிட வாழ்வின் விருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றன.

**யாழ்ப்பாண மாவட்டத்தின் இயற்கை வளங்கள்**




*பூநாரைக் கூட்டம் - தீவப்பகுதி*

எமது யாழ்ப்பாண மாவட்டம் சிறப்பான இயற்கை வளத்தைக் கொண்டுள்ளன.தொண்டமனாறு, உப்பாறு, மற்றும் யாழ்ப்பாண கடனீரேரிகளையும், தீவகப் பகுதிகளிலும் வடமராட்சி கிழக்கு மற்றும் மாவட்டத்தின் கடனீரேரிகளுடன் இணைவாக பாரிய கண்டல்களும், வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பாரிய மணல்மேடுகளும், சவுக்கம் காடுகள், அழகிய கடற்கரைகள் ஏனைய இயற்கைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும் காணப்படுகின்றன. இவற்றில் கடனீரேரிகளும், கண்டலத்தாவரங்களும், சதுப்பு நிலங்களும் உள்ளூர் வதிவிடப்பறவைகள் மற்றும் குடிபெயர் பறவைகள் போன்றவற்றின் பிரதான வாழ்விடங்களாக அமைவதுடன் பெருமளவான கடல்வாழ் உயிரினங்களின் புகழிடமாகவும் அமைகின்றன.

எமது மாவட்டத்திற்கு பல ஆயிரம் மைல்கள் கடந்து இந்தியாவினுடாக குடிபெயர் பறவைகள் பல நூறு வருடங்களாக வருகைதருகின்றன. இவ்வாறு வருகை தரும் பறவைகள் புரட்டாதி மாதத்திலிருந்து அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை இங்கேயே தங்குகின்றன. எமது வடபகுதி குடிபெயர் பறவையினங்களின் இறுதி இலக்கு பிரதேசமாக விளங்குவதுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தே ஏனைய மாவட்டங்களிற்கு செல்கின்றன.இவ்வாறான பறவையினங்களை பார்வையிடவும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து புகைப்படபிடிப்பாளர்கள் ஆய்வாளர்கள் வருடாவருடம் வருகை தருகின்றார்கள். பல நாடுகளிலிருந்து இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து வருகை தருகின்றார்கள் ஆனால் எமது மாவட்ட மக்கள் குடிபெயர் பறவையினங்களை

தரிசிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. சரசாலை, மண்டைதீவு, நாகர்கோவில் பகுதிகளில் பாரிய அளவில் பரந்து, விரிந்து மிகவும் உயரமாக இலங்கையில் எங்கும் காண முடியாத அளவிற்கு கண்டல்த்தாவரங்கள் இப் பகுதிகளில் காணப்படுகின்றன இவற்றின் அழகை இரசிப்பதற்கு தனியான மனம் வேண்டும் ஆயினும் இது சார்பான விடயங்களில் மக்கள் அக்கறை காட்டுவதில்லை.

வடமராட்சி கிழக்கில் காணப்படும் மணல் வளம் யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறந்த இயற்கை வளமாகும். கட்டுமாண துறையின் தேவைகளை பூர்த்தி செய்வதில் பங்களிக்கும் இவ்வளம் சுனாமி, புயல், மற்றும் வெள்ள அனர்த்தங்களிலிருந்தும், கடல் நீர் உள்வருகையிலிருந்து நன்னீரை பாதுகாப்பதிலும் மேலும் அப்பகுதிகளைப் பாதுகாக்கும் இயற்கை காவலரண்களாக விளங்குகின்றது. இவ்வாறான வளம் தொடர்ச்சியாக, சூழலுக்கு நட்புறவு அற்றவகையில் கட்டுப்பாடற்ற வகையில் அகழ்விற்கு உடபடுத்தப்படுகின்றன. இதேபோன்று ஏனைய பெறுமதி மிக்க இயற்கை வளங்கள் தொடர்பில் அவற்றின் முக்கியத்துவம் பயன்பாடு பாதுகாப்பு என்பவை தொடர்பான விழிப்புணர்வு எம் மாவட்ட மக்களிடையே மிகவும் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றன.

மேற்படி வள வாய்புக்களினடிப்படையில் பறவை பார்த்தல், கண்டல் தாவரங்களை தரிசித்தல், உல்லாச படகோட்டல், விலங்கினங்களைத் தரிசித்தல், இயற்கை நடை, பொழுது போக்கு மீன்பிடி என பல்வேறுபட்ட சூழலுக்கு நட்புறவான சுற்றுலா நடவடிக்கைகளை விருத்தி செய்யலாம் இதற்கான முழுமையான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் பொருளாதாரரீதியில் முன்னேற்றமடைய முடியும். இத்தகைய சுற்றுலா செயற்பாடுகள் உடல் உள ஆரோக்கியத்திற்கு பங்களிப்பதுடன் இயற்கை சூழலைப் பாதுகாக்கவும் உதவுகின்றன. நவீன வாழ்வியலின் போக்குக்குள் நுழைந்து நோக்கமற்ற வகையில் கைத்தொலைபேசி பயன்பாடு, சமூக வலைத்தளங்களின் பயன்பாடு போன்றவற்றிற்கு அடிமையாகி முறையற்ற வாழ்க்கைக்கு சென்று நோயாளர்களாக வலம் வரும் எம் இளைய சந்ததியினை வளப்படுத்த இவ் இயற்கைசார் சூழல் செயற்பாடுகள் அவசியமாகும்.

மேலும் இத்தகைய இயற்கை வளங்கள் சூழலுக்கு நட்புறவான சுற்றுலா நோக்கில் விருத்தி செய்யப்படுகின்ற போது எமது மாவட்டம் பொருளாதார ரீதியிலும் பலம்பெறுவதுடன் பெருமளவு வேலைவாய்புக்களையும் உருவாக்க முடியும். எனவே எமது சூழலுடன் ஒன்றிணைந்து செல்லக்கூடிய செயற்பாடுகளை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.





கண்டல்த்தாவரங்கள் - நாகர்கோவில்

**வீட்டு சூழல்தொகுதி விரிவாக்கமும் பாரம்பரிய மூலிகை மருந்துவம் உணவுகளின் பயன்பாடுகளை அதிகரித்தல் போன்றவைகளே கொரோனா உள்ளிட்ட வேறு பல உயிரியல்சார் தொற்றுகிருமிகளிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கான இயற்கை காவலரானாக விளங்குகின்றது.**

**சூழல்பாதுகாப்பு குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் இலக்கு**

ஐக்கிய நாடுகள் சபையின் 2015-2030 வரை அடையப்படவேண்டிய இலக்குகளாக வடிவமைக்கப்பட்ட நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி இலக்குகள் 17 இல் 15 ஆவது இலக்கு நிலத்திலுள்ள வாழ்க்கையைப்பற்றியது (Life on the land) அதாவது சூழலைப்பாதுகாத்தல், மீட்சியடையச் செய்தல், தரைச் சூழல் தொகுதியின் நீடித்து நிலைக்கும் பயன்பாட்டை அதிகரித்தல், நீடித்து நிலைக்கும் வகையில் காடுகளை முகாமைப்படுத்தல், பாலைவனமாக்கலை தடுத்தல், மற்றும் நிலம் தரமிறக்கப்படுவதையும் உயிர் பல்வகைமை இழப்பையும் தடுத்தல் போன்ற பிரதான நோக்கங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது.

**எமது செயலாற்றுகை**

இயற்கையுடன் ஒன்றிணைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பொதுத்துறை, தனியாத்துறை, சிவில்சமூகம், குடும்பம், தனிநபர் என ஐந்து பங்குதாரர்களின் ஆத்மாத்தமான பங்களிப்புடன் மேற்படி நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி இலக்குக்கு இணைவாகவும், எமது நாட்டின் தேசிய கொள்கை அபிவிருத்தி திட்டங்களிற்கு அமைவாகவும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இயற்கை வளங்களை சிறந்த பங்குதாரர்களின் பங்களிப்புடன் நீடித்து நிலைக்கும் நோக்கில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், கல்விச் செயற்திட்டங்களினுடாகவும் ஏனைய வழிமுறைகளினுடாகவும் எல்லா தரப்பினர்களிற்கும் சூழல் தொடர்பான விழிப்புணர்வை வழங்கி சூழலுக்கு இயைந்த அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சூழலுக்கு நட்புறவான சுற்றுலா செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், வீட்டு சூழல்தொகுதியை விரிவுபடுத்துதல், பாரம்பரிய மூலிகை மருந்துகள் உணவுகளின் பயன்பாடுகளை அதிகரித்தல், போன்ற செயற்பாடுகளினுடாக மக்களையும் இயற்கையையும் ஒன்றிணைக்க கூடிய சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில், நாம் ஒன்றிணைந்து செயற்படும் போது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இயற்கைக்கு இயைபான சூழல் அனர்த்தங்கள் உள்ளிட்ட அனைத்து அனர்த்தங்களிலிருந்து மீட்சித்திறன் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில் எமது நிர்வாக அபிவிருத்தி செயற்பாடுகளை முனைப்புடன் ஆற்றுவதற்கான தருணம் இது என்ற வகையிலும் இந்நாளில் நாம் உறுதிபுணுவேமாக.

கட்டுரையாளர் - பா.ராஜ்குமார்